ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2329/45 - 2023 අප්‍රේල් මස 28 වැනි සිකුරාදා - 2023.04.28
2329/45 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

*ச.வ.பீ. 94/47* (VIII)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

6(2) (ஆ) மற்றும் 21(2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2) (ஆ) என்னும் பிரிவாலும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம்-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "பிலாக்கட்டுமுல்ல ஸ்ரீ புஷ்பாராம புராண விகாரை" என அழைக்கப்படும் காணி இடப்பரப்பு மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான "பிலாக்கட்டுமுல்ல ஸ்ரீ புஷ்பாராம புராண விகாரை" இற்கு உருவரைப் பௌதீக திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
*2023, ஏப்பிறல் 28.*

1A - G 39408 — 16 (2023/04)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

**பிலாக்கட்டுமுல்ல ஸ்ரீ புஷ்பாராம புராண விஹாரை இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்**

வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்திலுள்ள நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 507, பிலாக்கட்டுமுல்ல கிராம அலுவலர் பிரிவினுள் பிலாக்கட்டுமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் தலைமையதிபதியின் 2022, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதியைக் கொண்ட குறைநிரப்புக் காணி விபரப் பட்டியல் இல. PU/NTT/Sup. TL 2022/04 என்பதில் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறாக காணித்துண்டு இல. 18, பின்கும்புற (1.6343 ஹெக்யேடர்கள்) காணித்துண்டு இலக்கம் 30, பின்வத்த, பக்மீகஹகும்புர பில்லேவ, மாதந்கஹகும்புர பில்லேவ மற்றும் தெம்புனெகெலே அல்லது கொரொஸ்வத்த (1.3737 ஹெக்டேயர்கள்) மற்றும் காணித்துண்டு இலக்கம் 33, ரத்மல்கஹகும்புர (0.6807 ஹெக்டேயர்கள்) என்பவற்றைக் கொண்டுள்ள 3.6887 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள அக்காணியின் எல்லா இடப்பரப்பு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

காணித்துண்டு இல. 18 - பின்கும்புற (1.6343 ஹெக்டேயர்கள்)

வடக்கு : பிலாக்கட்டுமுல்ல (கால்வாய் உள்ளடங்கலாக) ஒரு பகுதி ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 17 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 19 (கால்வாய்) ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 20, பிலாக்கட்டுமுல்ல (கால்வாய் உள்ளடங்கலாக) ஒரு பகுதி.

காணித்துண்டு இல. 30 - பின்வத்த, பக்மீகஹகும்புற பில்லேவ, மாதந்கஹகும்புரெ பில்லேவ மற்றும் தெம்புனெகெலே மறுபெயர் கொரொஸ்வத்த (1.3737 ஹெக்டேயர்கள்)

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 29 (கால்வாய்), 05 (வீதி) மற்றும் 31 (கால்வாய்) ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 31 (கால்வாய்) மற்றும் 45 ;
தெற்கு : இலக்கம் 507/ஏ, மைலாவ கிராம அலுவலர் பிரிவு ;
மேற்கு : இலக்கம் 507/ஏ, மைலாவ கிராம அலுவலர் பிரிவு, காணித்துண்டு இலக்கம் 27 மற்றும் 28.

காணித்துண்டு இல. 33 - ரத்மல்கஹகும்புர (0.6807 ஹெக்டேயர்கள்)

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 04 (வீதி), 3 மற்றும் பிலாக்கட்டுமுல்லவின் (கால்வாய் உட்பட) ஒரு பகுதி ;
கிழக்கு : பிலாக்கட்டுமுல்லவின் (கால்வாய் உட்பட) ஒரு பகுதி, காணித்துண்டு இலக்கம் 46 மற்றும் 35 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 35 மற்றும் 34 (கால்வாய்) ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 34 (கால்வாய்) மற்றும் 4 (வீதி).

EOG 04 - 0198

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.